பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆவணி 22 (7—9—72) வியாழன் வெளியூர்: ஆவணி 23 (8—9—72) வெள்ளி [இதழ்: 72

## இரயில்வே வேலைநிறுத்தம் சட்டவிரோதம்

புதுடில்லி, செப். 7—

தமிழ்நாடு -- கேரளம் -- ஆந்திரம் -- மைசூர் -- மாராட்டிரம் ஆகிய மாநிலங்களிலுள்ள தெற்கு இரயில்வேயிலும் -- தென் மத்திய இரயில்வேயிலும் எந்தத் தொழில் தகராறு தொடர்பாகவும் வேலைநிறுத்தம் செய்வதை மூன்று மாதங்களுக்கு உடனடியாகத் தடைசெய்து -- இந்தியப் பாதுகாப்பு விதிகளின்கீழ் இந்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது.

# இந்திரா கூற்றுக்கு கலைஞர் பதில்

## 'மக்களுக்கு நன்மை செய்யவே மாநில சுயாட்சி'

## 'தீவிர திட்டங்களைச் செயல்படுத்தத் தி. மு. க. அரசு தயங்காது'

### காங்கிரசு ஆளும் மாநிலங்களின் நிலை என்ன?

சென்னை, செப். 7—

நாகர்கோயிலில் நடந்த இந்திரா காங்கிரசுப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், மாநில சுயாட்சிக் கோரிக்கை பற்றித் தெரிவித்த கருத்துக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்.

தலைமையமைச்சரை, 'சர்வாதிகாரி' என்று யாரோ சொல்லுவதை மனத்தில் வைத்துக்கொண்டு இந்திரா காந்தி குறிப்பிட்டதை செய்தியாளர்கள் சுட்டிக்காட்டிய போது, நான் அப்படிச் சொல்லவில்லை" என்று முதல்வர் பதிலளித்துவிட்டு, மத்தியில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தினார்.

இந்திரா காந்தியின் கூற்றுப்படி, 'வலுவுள்ள முதலமைச்சர்கள், மக்களுக்கு நன்மை செய்ய வாய்ப்பளிக்க வேண்டாமா?'. என்று வினவினார்.

செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—" தலைமையமைச்சரை விட மாநில முதலமைச்சர்கள் அதிகாரம் படைத்தவர்கள் -- வலுவுள்ளவர்கள் என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி பேசியிருக்கிறாரே!"

முதல்வர்:—"தலைமையமைச்சரை சர்வாதிகாரி என்று நான் சொல்ல மாட்டேன்; இந்திய அரசியல் சட்டத்தின் காரணமாகக் குவிக்கப்பட்டிருக்கின்ற அதிக அதிகாரங்களைக்கொண்ட ஒரு பதவியில் அவர் பொறுப்பேற்று சிரமப்படுகிறார் என்பதற்காகத்தான், 'அரசியல் சட்டத்தைத் திருத்தி அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவலாக்கப்பட வேண்டும்' என்று திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புகிறது.

மாநில முதலமைச்சர்கள் வலுவுள்ளவர்கள் என்று தலைமையமைச்சர் கூறுவதை ஒப்புக்கொள்கிறேன்; அந்த வலுவுள்ளவர்கள் மக்களுக்கு நன்மை செய்ய வாய்ப்புகள் அளிக்க வேண்டாமா? வலுவுள்ளவர்களை நம்பி அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தால் அந்தந்த மாநில மக்களுக்கு நிறைந்த நன்மைகள் விரைந்து கிடைக்கும் என்பதே என் கருத்தாகும்."

### தீவிரத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு உண்டு

கேள்வி:—"சமுதாய அடிப்படையிலும் -- பொருளாதார அடிப்படையிலும் நாடு முன்னேற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்; தங்கள் நலனுக்காக ஒரு கோஷ்டியோ குழுவோ கிளர்ச்சி செய்யக்கூடாது -- என்று நாகர்கோயிலில் தலைமையமைச்சர் பேசியிருக்கிறாரே!"

முதல்வர்:—"சமுதாய அடிப்படையிலும் -- பொருளாதார அடிப்படையிலும் முற்போக்கான கொள்கைகளைத் திட்டமிட்டுச் செய்வதில் இந்தியத் தலைமையமைச்சர் எவ்வளவு அதி தீவிரம் காட்டினாலும், அதைத் தமிழ்நாட்டில் தி.மு. கழக அரசு பின்பற்றத் தயாராக இருக்கிறது; ஆனால், தலைமையமைச்சரின் தீவிரக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் அவரது கட்சி ஆளும் மாநிலங்களில்தான் தயக்கம் இருப்பதாகத் தோன்றுகிறது; தலைமையமைச்சரின் சோஷலிசக் கொள்கைகளைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிற்கும் என்று தலைமையமைச்சரிடம் நான் பன்முறை கூறியிருக்கிறேன்; இப்போதும் அந்த நம்பிக்கையை அவருக்குத் தெரிவிக்கிறேன்."

### இலங்கைத் தமிழர் பிரச்சினை

கேள்வி:— "இலங்கைத் தமிழர்கள் பற்றித் தலைமையமைச்சருடன் பேசினீர்களா?"

முதல்வர்:— 'இலங்கையில் பொதுவாக இந்தியர்கள் நிலை -- குறிப்பாகத் தமிழர்கள் நிலை பற்றியும் தலைமையமைச்சரிடம் விளக்கிக் கூறினேன்; அவர்களுடைய சங்கடங்கள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் தலைமையமைச்சருக்கும் அக்கறை இருப்பதாக நம்புகிறேன்."

### சேது சமுத்திரத் திட்டம்

கேள்வி:— "தலைமையமைச்சருடன் தாங்கள் எது பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தினீர்கள்?"

முதல்வர்:— "சேதுசமுத்திரத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கூறினேன்; அமைச்சர் இராசராமும் பேச்சுவார்த்தையின் போது உடனிருந்தார்; அது சம்பந்தமாக அதிகாரிகளுடனும் -- தொடர்புடைய அமைச்சர்களுடனும் தொடர்ந்து பேசி, நான் டில்லிக்குச் செல்லும் போது அது பற்றிப் பேசுவதாகத் தலைமையமைச்சர் கூறினார்."

### காமராசருடன் பேசினரா?

கேள்வி:—"குமரி இரயில் பாதை அடிக்கல் நாட்டு விழாவிற்கு வந்த காமராசர் தலைமையமைச்சருடன் பேசினரா?"

முதல்வர்:— "தலைமையமைச்சரே பதில் சொல்லிவிட்டாரே -- இரண்டு பேரும் பேசியதாகத் தெரியவில்லை."

## அறிஞர் அண்ணா பிறந்த நாள் பரிசு

### ஓர் இலட்சம் பேருக்கு வீட்டு மனைப் பட்டா

மதுரை செப். 7—

செய்தியாளர்:— "வருகிற 15ம் நாள் -- அண்ணா பிறந்தநாளன்று புதிய திட்டங்கள் எதையும் அறிவிக்க இருக்கிறீர்களா?"

முதலமைச்சர்:— 'அண்ணா பிறந்த நாள் பரிசாகத் தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்கள் 1 இலட்சம் பேருக்குக் குடியிருப்பு மனைகள் சொந்தமாக்கப்படும்; இதற்கானபட்டா வழங்கும் விழா, செப். 14ந் தேதி கும்பகோணத்தில் நடைபெறும்; இதில் நான் கலந்து கொள்கிறேன், மறுநாள் 15ந் தேதி நடைபெறும் அண்ணா விழாவில் கலந்து கொள்கிறேன்."

## தீப்பெட்டித் தொழிலுக்கு நெருக்கடி நிலை

### 50,000 தொழிலாளர்கள் அவதி

### மத்திய அரசின் போக்கால் ஏற்பட்ட விளைவு

குடியாத்தம், செப். 7—

வடஆற்காடு மாவட்டம் குடியாத்தம் பகுதியில் உள்ள 150 தீப்பெட்டித் தொழிற்சாலைகள், இத்திங்கள் 10-ந் தேதி முதல் மூடப்படுகின்றன.

மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ள சில நிவாரணங்கள் கிடைக்கும் வரையில் இத்தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கும் என்று தெரிகிறது.

தீப்பெட்டித் தயாரிப்பாளர்கள் சங்கம் இத்தொழிற்சாலைகளை மூடிவிட வேண்டிய முடிவை எடுத்தது.

சோதனை என்ற பெயரில் மத்திய கலால் அதிகாரிகள் தொந்தரவுகள் கொடுப்பதாகவும், மொத்த விற்பனை மார்க்கெட்டில் சரக்குகள் முடக்கப்படுவதாகவும் சங்கம் கூறுகிறது.

'பண்டு ரோல்' முறை மீண்டும் கொண்டுவரப்பட வேண்டுமென்பது உட்பட தீப்பெட்டித் தயாரிப்பாளர்களின் கோரிக்கைகளை ஏற்கும்படி தலைமையமைச்சருக்கு சங்கம் தந்தி கொடுத்துள்ளது. தந்தியின் நகல்கள் மத்திய நிதியமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 50,000 தொழிலாளர்கள் இத்தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்றனர்.

## கலப்பட மருந்துக்கு தடை

### தமிழ்நாடு அரசு நடவடிக்கை

சென்னை, செப். 7—

தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஏழு வகையான 'கால்னியாஷிட்' மருந்துகளை விற்பனை செய்யக் கூடாது எனத் தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

இம்மருந்துகளில் நச்சுத்தன்மை கலந்திருப்பதால் அவைகளை இந்திய மருத்துவம் பரிசோதனைக் கூடத்திற்கு சோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

'கால்னியாஷிட்' என்ற இம்மருந்து குழந்தைகளுக்கு ஏற்படும் கக்குவான் இருமலைக் கட்டுப்படுத்தவும் -- காசநோய்த் தடுப்புக்காகவும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படுவதாகும்.

எல்லா மருந்துக் கடைகளுக்கும் இத்தகைய மருந்துகளை விற்பனை செய்யக்கூடாது என்றும், கையிருப்புள்ள இத்தகைய மருந்துகளை உடன் அனுப்பிவைத்துவிட வேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களையும் இத்தகைய மருந்துகளை வாங்கிப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மருந்துகளில் இத்தகைய கலப்படம் ஏற்படாதிருக்கத் தமிழக அரசு மேலும் 50 மருந்துப் பரிசோதனை அதிகாரிகளை நியமிக்கத் தீர்மானித்திருக்கிறது.

## ஆச்சாரியாரின் புளுகு அம்பலம்

### கலைஞர்மீது களங்கம் கற்பிக்கச் செய்த முயற்சி தோல்வி

### விஷமக் கூற்றுக் கேட்டு இந்திரா காந்தி வியப்பு

திருவனந்தபுரம் செப். 7 -

தமிழ்நாடு முதலமைச்சர்மீது மத்திய (சி.பி.ஐ) புலனாய்வுத் துறை விசாரணை நடந்திருப்பதாகவும் -- அதன் அறிக்கையை மத்திய அரசு வெளியிட வேண்டுமென்றும் சி. இராசகோபாலாச்சாரியார் கோரியிருந்தது பற்றித் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தியிடம் இங்கு செய்தியாளர் கூட்டத்தில் கேட்கப்பட்டபோது 'விசாரணையா -- என்ன விசாரணை -- முதன் முதலில் அதுபற்றி இப்போதுதான் கேள்விப்படுகிறேன்' என்று தலைமையமைச்சர் பதிலளித்தார்.

"அந்த அறிக்கையை வெளியிடுவதே முதலமைச்சருக்கு நியாயம் செய்வதாகும்" என்று 'சுயராஜ்யா' ஏட்டில் ஆச்சாரியார் அண்மையில் எழுதியிருந்தார்.

'என்ன விசாரணை -- எனக்கு அதுபற்றி ஒன்றும் தெரியாதே" என்று திருமதி இந்திரா காந்தி கூறினார்.

# அறிவுச் சுடர் கொளுத்தும் திருப்பணியில் ஈடுபட்டிருப்போர்

## நாட்டினுடைய எதிர்காலத்தை உருவாக்குவதில் அரசியல்வாதிகளைவிட மேலானவர்கள்

### ஆசிரியர் நாளில் அமைச்சர் நாவலர் வானொலி உரை

சென்னை, செப். 7—

"ஆசிரியர்கள் தங்களுடைய உரிமைகளுக்காகக் கோரிக்கை எழுப்புவது தவறு அல்ல; ஆனால் அவர்கள், தங்களுடைய கடமையையும் பொறுப்பையும் மறந்து ஆர்ப்பாட்டக்காரர்களாக மாறுவது முறையற்றது என்பது மட்டுமல்லாமல், மாணவர்களின் எதிர்கால வாழ்வையும் மிக பாதிப்பதாகும்"

என்று, கல்வியமைச்சர் நாவலர் அவர்கள், ஆசிரியர் நாளையொட்டி வானொலியில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் கூறியதாவது:—

"ஆசிரியர் நாள் – ஆசிரியர் நலன்பேணும் நாளாகவும், ஆசிரியர்களுக்கும் புகழும் பெருமையும் தேடித்தரும் நாளாகவும், ஆசிரியர்களின் கடமையையும் பொறுப்பையும் வற்புறுத்தும் நாளாகவும் கொண்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

நம் நாட்டின் எதிர்காலத்தைப் பல்வேறு துறைகளில் உருவாக்குகின்ற சிற்பிகள் இந்தக் காலத்தின் குழந்தைகளே ஆவார்கள்.

குழந்தைகள் எப்படி உருவாக்கப்படுகிறார்களோ அப்படித்தான் எதிர்காலமும் அமையும். குழந்தைகளை உருவாக்குகிற பொறுப்புகள் ஆசிரியர்களிடத்திலேதான் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

குழந்தைகளை முரடர்களும் – முட்டாள்களும் பெற்றெடுக்கிறார்கள்; வஞ்சகர்களும் பெற்றெடுக்கிறார்கள்; கொலைக்காரர்களும் பெற்றெடுக்கிறார்கள்; ஆனால் அவர்களை நல்லவர்களாக — வல்லவர்களாக — அறிவு, ஆற்றல் மிக்கவர்களாக – பண்பாடு உடையவர்களாக வளர்க்கின்ற முழுப் பொறுப்பும் ஆசிரியர்களையே சார்ந்ததாகும்.

எனவேதான், 'உண்மையான எதிர்காலத்தை உருவாக்குகிறவர்கள் ஆசிரியர்கள்' என்று எல்லோரும் கூறுகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் ஒருமுறை குறிப்பிடும்போது, 'ஒரு நாட்டின் உண்மையான எதிர்காலத்தை உருவாக்குபவர்கள் அரசியல்வாதிகளா – ஆசிரியர்களா' என்ற வினாவை எழுப்பி – அதற்கு அவரே விடையும் அளித்தார்கள்; 'பல அரசியல்வாதிகள் தங்களுடைய எதிர்காலத்தையே உருவாக்கிக்கொள்ள முடியாதவர்களாக அவதிப்படும்போது, அவர்களால் நாட்டின் எதிர்காலத்தை எப்படி உருவாக்க இயலும்; உள்ளபடியே, நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குபவர்கள் ஆசிரியர்களாகத்தான் திகழ்கிறார்கள்' என்று குறிப்பிட்டார்கள்.

ஆசிரியர்களுடைய நலன்களைக் காப்பதற்கும் – அவர்களுடைய நலன்களைப் பெருக்குவதற்கும் – வசதி வாய்ப்புக்களை மென்மேலும் ஏற்படுத்தித் தருவதற்கும் இன்றையத் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு — அவற்றைச் சிறப்பாகவும் செம்மையாகவும் ஆற்றிக்கொண்டு வருகிறது.

எல்லாத் துறைகளிலும் — அதாவது அரசுத் துறை — உள்ளாட்சித் துறை — தனியார் துறை — ஆகிய பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஒரேவிதமான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் ஏற்றத்தாழ்வுகளை அறவே அகற்றிட இன்றையத் தமிழக அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது.

ஆசிரியர் நலத் திட்டத்துக்கெனத் தமிழக அரசு ஆண்டு ஒன்றுக்குத் தனக்குரிய பங்காக ரூ. 25,000 வரை கொடுத்துவருகிறது; மேலும் நன்கொடைகள் மூலமாகவும் நிதி திரட்டப்படுகிறது. இப்படித் திரட்டப்படும் ஆசிரியர் நலத் திட்ட நிதி ஆசிரியர்களின் குடும்பங்களுக்கே செலவழிக்கப்பட்டுவருகிறது.

ஆசிரியர்கள் பணி செய்யும்போது ஏற்படும் பிணியின் காரணமாக வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கும் — வேறு இயற்கையான காரணத்தால் ஏற்படும் தொல்லைகளின் காரணமாக ஆசிரியர் பதவிகளை இழந்து அவதிப்படுவோருக்கும் பதவியில் இருக்கும்போதே இறந்துபடும் ஆசிரியர்களின் குடும்பங்களுக்கும் இந்த நிதி பயன்பட்டு வருகிறது.

இந்த நிதியினை ஆராய்ந்து உரிய ஆசிரியருக்கு வழங்குவதற்கான ஒரு குழு தமிழகக் கல்வி அமைச்சர் தலைமையில் இயங்கிவருகிறது.

பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் உரிய முறையில் ஆய்வு செய்யப்பட்டு — நல நிதியிலிருந்து ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு உதவி வழங்கப்படுகிறது; இப்படி நிதி வழங்கும் முயற்சி 1966-ம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது; கொடிகள் விற்பனை மூலமாகவும் — சில நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலமாகவும், 1972-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31-ம் நாள் வரை ரூ. 37 இலட்சம் இந்நிதியில் உள்ளது; இது அனைத்தும் மனமுவந்து அளிக்கப்பட்ட நிதியேயாகும்.

ஒவ்வோர் ஆண்டும் ஆசிரியர் நாளில் ஐந்து இலட்சம் ரூபாய் நிதி திரட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது; இவ்வாண்டும் தமிழகத்தில் ஐந்து இலட்சம் ரூபாய்க்குக் குறையாமல் நிதி திரட்ட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த வேண்டுகோளை ஏற்று ஆசிரியர்களும் — கல்வி நலனிலே அக்கறை கொண்ட பொதுமக்களும் — மாணவர்களும் இந்தக் குறியளவினை எய்துவதற்கும் பேருதவி புரியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரையில் இந்த நிதியிலிருந்து ரூ 11 இலட்சம் வரை உதவியாக அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்களுடைய நலன் கருதி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஆசிரியர் இல்லம் அமைக்கப்பட வேண்டும் என்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டு — அதற்கான நடவடிக்கைகள் ஆங்காங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த ஆசிரியர் இல்லம், ஆசிரியர்கள் ஒன்றுகூடுவதற்கும் — கலந்து உரையாடுவதற்கும் — தங்களுடைய அறிவை வளர்த்துக்கொள்வதற்கும் — கல்விப் பணிகளை அறிந்து முடிவு செய்வதற்கும் பயன்படுகின்ற வகையில் அமையும்.

வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் ஓர் ஆசிரியர் இல்லம் அமைக்கப்பட்டு மிகவும் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது; இப்படிப் பட்ட இல்லங்கள் அமைக்க அரசு ரூ. 50,000 நன்கொடையாக அளித்துவருகிறது.

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த உதகையிலும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கொடைக்கானலிலும், தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூரிலும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சியிலும் ஆசிரியர் இல்லங்கள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நல்ல ஆசிரியர்களுன் பணிகளை நாடு பெரிதும் எதிர்பார்த்திருக்கின்றது. மாணவர்களிடையே ஏற்பட்டிருக்கும் ஒழுங்கற்ற நிலைமை—கட்டுப்பாடற்ற போக்கு—படிப்பிலே கவனம் செலுத்தாமை—வன்முறையில் ஈடுபடுதல்—ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுதல்—பள்ளிக்குச் செல்லாமை போன்றவைகளை அறவே நீக்கி மாணவர்களை ஒழுங்காகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, அவர்களின் அறிவுத் திறனையும் ஆற்றல் திறனையும் வளர்த்து அவர்களைப் பண்பட்ட நெறியில் பழக்கப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்ததாகும்; இப்படிப்பட்ட பணிக்கு உள்ளன்போடு தம்முடைய உள்ளத்தையும் தம்மையும் ஒப்படைத்துக் கடமை ஆற்ற வருபவர்களே சிறந்த ஆசிரியர்களாக உலகத்தாரால் போற்றப்படுகிறார்கள்.

சுடர்விட்டு நன்றாக எரிகின்ற மெழுகுவர்த்திதான் ஆயிரம் மெழுகுவர்த்திகளை எரிய விட்டுத் தானும் எரிந்துகொண்டிருக்கும்; அதுபோல், சிறந்த அறிவுச் சுடரைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள், ஆயிரக்கணக்கான மாணவ அறிவுச் சுடர்களை ஒளிவிட்டு எரியும்படியாகச் செய்ய முடியும்; இப்படிப்பட்ட கடமையாற்ற ஆசிரியர் உலகம் முயன்று முன்னேறுவதாக!"

# உரிமைக்கு வாதாடிச் சிறை சென்றவர்

## வ. உ. சி. பெயர் நினைவுறுத்தும் உண்மை

### சிலைத் திறப்பு விழாவில் கலைஞர் விளக்கம்

தூத்துக்குடி, செப். 5—

"'வ, உ. சி. என்றால், 'வ'ழக்கறிஞர் — 'உ'ரிமைக்காக வாதாடிச் 'சி'றை சென்றவர் ஆவார்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், வ. உ. சி. சிலைத் திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அவர் பேசியதாவது:—

"வீரர் சிதம்பரனார் பிறந்த இப்பகுதியில் தலைமையமைச்சர் கலந்துகொண்டு இந்த விழாவினைச் சிறப்பிக்க வந்திருப்பது, 'அவர் நம்மை மதிக்கிறார்—தமிழக மக்களைப் பெருமைப்படுத்துகிறார்' என்பதற்கு அடையாளமாகும்.

இந்த விழாவைத் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் உணர்வோடும்—பொங்கி எழும் ஆர்வத்தோடும், இங்கு மட்டுமல்ல— கிராமங்கள்தோறும் — வீதிகள்தோறும்—வீடுகள்தோறும் மகிழ்வோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவருடைய தியாகத்திற்கு நன்றி காட்ட மட்டுமல்ல — நாம் எழுச்சி பெறுவதற்காகவும் வ. உ. சி. சிலையினைத் தமிழக அரசின் சார்பில் முயற்சி எடுக்கப்பட்டு — நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு — இன்றைக்கு அந்த சிலை தலைமையமைச்சர் அவர்களாலே திறக்கப்படுகிறது.

இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் — குமரிமுனையிலிருந்து காஷ்மீர் வரை பல இலட்சக்கணக்கான தியாகிகள் — வீரமிகுத் தலைவர்களின் தலைமையில் போராடியிருக்கிறார்கள்.

இத்தகைய எண்ணற்ற வீரர்களும்—விடுதலை வித்தகர்களும்—மறவர்குல மாணிக்கங்களும் இன்றைக்கு நம்மிடையே இல்லாவிட்டாலும், அவர்கள் எல்லாம் நமது ஒவ்வொருவரின் இதயத்திலும் நிறைந்திருக்கிறார்கள் – உள்ளத்தோடு ஒன்றியிருக்கிறார்கள்!

இந்தத் தூத்துக்குடித் திருத்தலத்தில் மணற் பரப்பிற்கெதிரே விரிந்து பரந்துள்ள கடலில், ஒரு தமிழ்மகன் எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கிடையே கப்பலை மிதக்க விட்டிருக்கிறார்; அப்படிப்பட்ட எழுச்சி மிகுதியாக வரலாற்றின் சின்னமாக அவர் திகழ்ந்தார்!

அவர் பேசினாலும் எழுதினாலும், புயல் ஏற்படும் அளவுக்குத் திலகர் வழியில் வீரமிக்கப் போராட்டம் தேவை — என்று முரசொலித்தார்; அதனால்தான் ஆங்கிலேயர்கள், அவருக்கு இரண்டு ஆயுள் தண்டனைகளை — 40 ஆண்டுக்காலம் தண்டனை விதித்துச் சிறையிலே வைத்துப் பூட்டினார்கள்.

அத்தண்டனை, அப்பீலில் ஆறு ஆண்டுக் காலமாக குறைக்கப்பட்டதென்றாலும், அந்த ஆறு ஆண்டுகளில் அவர் அணு அணுவாகச் சித்திரவதைக்கு இலக்காக்கப்பட்டார்; தனிமைச் சிறையில் தள்ளப்பட்டுச் செக்கிழுத்து — கல்லுடைத்துச் சொல்லவொண்ணாத் துன்பங்களை அனுபவித்தார்; மூத்திரச் சட்டியைச் சுமக்கின்ற அளவுக்கு அவர் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்; அத்தனைத் துன்பத்தையும் சித்திரவதைகளையும் நாட்டின் விடுதலைக்காக மகிழ்வோடு ஏற்ற மாவீரர் அவர்!

இதே தூத்துக்குடிக் கடற்கரையில் — அரசுக்குச் சொந்தமான இடத்தில் — இன்னும் மூன்றாண்டுக் காலத்திற்குள் விண்ணைத் தொடும் உயர்ந்து நிற்கும் கட்டடங்கள்—தொழிற்சாலைகள் ஏற்படப் போகின்றன; அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் புகை மண்டலம் மேக மண்டலத்தோடு உறவாடக்கூடிய அளவுக்குத் தொழிற்சாலைகள் நிறைந்த இந்தப் பகுதியில் வ. உ. சி. சிலை திறக்கப்படுவது பொருத்தமானதாகும்.

இந்தச் சிலையினைத் திறந்திட இந்தியத் தலைமையமைச்சர் வந்திருப்பதற்காக தமிழ் மக்கள் சார்பில் எனது இதயம் கனிந்த நன்றியயை உரித்தாக்குகிறேன்.

இந்த நேரத்தில் மகிழ்ச்சியான ஒரு அறிவிப்பையும் வெளியிட விரும்புகிறேன்; சென்னை நகரத்திலுள்ள ஜார்ஜ் டவுன் பகுதியை, 'வ. உ. சிதம்பரம் நகர்' என்று ஆக்கவேண்டும் என்று நீண்டகாலமாகவே ஒரு கோரிக்கை இருந்துவந்தது; ஜார்ஜ் டவுன் பகுதி, 'சிதம்பரனார் நகராக' விரைவில் மாறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

'இப்படிப் பெயரை மாற்றினால் மட்டும் போதுமா' என்று சிலர் கேட்கக்கூடும்; ஓர் இலட்சியத்தை நினைவூடுத்த பெயரை மாற்றுவது ஒன்றும் தவறில்லை; ஏனென்றால், அண்மையில் நமது தலைமை அமைச்சர் இந்திரா அவர்கள் சிம்லாவிற்குச் சென்றிருந்த நேரத்தில், ஒரு கட்டடத்திற்கு — அவரது இலட்சியத்திற்கு அறிகுறியாக பெயரை மாற்றியிருக்கிறார்கள்."

# உணவுப் பொருள் வாரியத்தின் ஊழல் போக்கு

## உடனடியாக நடவடிக்கை எடுக்க இரா. செழியன் வலியுறுத்தல்

### மக்களவையின் மூன்று மணிநேர விவாதம்— உறுப்பினர்கள் கண்டனக் கணை

புதுடில்லி, செப். 6—

"உணவுப் பொருள் வர்த்தக வாரியம், உணவுத் தானியப் பொருட்களைக் கொள்முதல் செய்வதில் இடைத் தரகர்களையே நம்பியிருக்கிறது; அவர்களைப் பயன்படுத்தி வருவதால், அதிக அளவில் பொருள் இழப்பு ஏற்படுகிறது; இந்த அவல நிலை ஏன்?

'உணவுப் பொருள் வர்த்தக வாரியத்தில் மலிந்துள்ள ஊழல்கள்—ஒழுங்கீனங்களுக்கு வாரியத் தலைவர் அல்லது நிர்வாக இயக்குநர் — யார் பொறுப்பாக இருந்தாலும், அவர்கள்மீது உடனடி நடவடிக்கை எடுக்கபபட வேண்டும்"

என்று நாடாளுமன்றத் தி. மு. க. குழுக்களின் தலைவர் இரா. செழியன் அவர்கள், மக்களவையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர்.

"உணவுப் பொருள் வர்த்தக வாரியத்தில், மக்கள் ரூ 1.6 கோடி மூலதனமாகப் பணம் செலுத்தப்பட்டிருக்கிறது; எனவே, இதில் விழிப்புடன் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசரமானதும் — அவசியமானதும் ஆகும்" என்று வலியுறுத்தினர்.

"உணவுப் பொருள் வர்த்தக வாரியம், உணவுத் தானியப் பொருட்களைக் கொள்முதல் செய்வதிலும்—அவைகளைச் சேமித்து வைப்பதிலும்—நிறுவனப் பராமரிப்பிலும் பெரும் அளவும் பணத்தை வீணாக்கி, விரயமாக்கிக்கொண்டே வருகிறது; ஒரு டன்னுக்கான இழப்பு அதிகரித்தே வந்துள்ளது" என்றும் குற்றஞ் சாட்டினர்.

உணவுப் பொருள் வர்த்தக வாரியத்தின் செயல்பாடு குறித்து மக்களவையில் மூன்று மணி நேரம் விவாதம் நடைபெற்றது; வாரியத் தலைவர் மற்றும் சில அதிகாரிகள்மீது இரு தரப்பு உறுப்பினர்களும் ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர்.

உணவுப் பொருள் வர்த்தக வாரியத்தில் ஏற்பட்டுள்ள பல சீர்கேடுகளைப் புள்ளிவிவர ஆதாரங்களுடன் பிலுமோடி என்பவர் எடுத்துக்காட்டினார்.

இந்த வாரியத்தின் ஒவ்வொரு பிரிவிலும் ஊழலும் ஒழுங்கீனமும் இருப்பதைச் சுட்டிக்காட்டினர்.

"இந்த வாரியத்தில் ஊழல்—ஒழுங்கீனங்களில் காங்கிரசுக் கட்சிக்கு முக்கியப் பங்கு உண்டு" என்று ஜோதிர் மயி பாசு குறிப்பிட்டுக் கூறினர்.

"இந்த 'வாரியத்தின் தலைவர் இக்பால் சிங் திரட்டிய பணத்தில் பெரும் பகுதி காங்கிரசுக் கட்சிக்குச் சென்றிருக்கிறது" என்றார்.

"உயர்மட்ட அளவில் இந்த வாரியத்தின்மீது விசாரணை நடத்தப்பட வேண்டும்; இந்த வாரியத்தின் தலைவருக்குத் தன்மானம் இருந்தால், உடனடியாக அவர் பதவி விலகியிருக்க வேண்டும்" என்று சமர் குகா என்பவர் சுட்டிக் காட்டினர்.

"இந்த வாரியத்தின் காண்டிராக்டர்களில் பலர், ஆளும் கட்சிக்கு நிதி திரட்டுபவர்களாவர்; 'பணம்' என்ற பாலைத் தரும் கறவை மாடுகளாகக் காங்கிரசுக் கட்சிக்கு அவர்கள் இருக்கின்றனர்" என்றார்.

### கோரிக்கையை ஏற்க அமைச்சர் மறுப்பு

"வாரியத் தலைவர்மீது புகார் — அதன் மற்ற அதிகாரிகள் சிலர் மீது புகார் — ஆகிய இருவகை புகார்களையும் அரசு கவனமாக ஆராயும்" என அமைச்சர் பக்ருதீன் அலி அகமது உறுதி கூறினர்; ஆனால், வாரியத்தின் செயல்பாடு பற்றி உயர்தர கமிஷன் முழு விசாரணை செய்ய வேண்டும் என்ற எதிர்க் கட்சிக் கோரிக்கையை அவர் ஏற்க வில்லை.

"ஊழல் புகார்கள்பற்றி விசாரித்து — ஆதாரம் இருப்பதாகத் தெரிந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்; விசாரணை அறிக்கை கிடைத்ததும் அது அவையில் தாக்கல் செய்யப்படும்" என்றார்.

"புகார் காரணமாக வாரியத் தலைவர் இராஜினாமா செய்ய வேண்டும் அல்லது அவர் 'சஸ்பெண்டு' செய்யப்படவேண்டும்" எனப் பிலுமோடியும் மற்றும் சிலரும் வற்புறுத்தினர்; 'அவர் நிரபராதியாக இருந்தால் அவரை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளலாம்' என்றனர்.

அந்த யோசனையை ஏற்க அமைச்சர் மறுத்தார்; 'எதிர்க் கட்சியினர் கண்டனங்களில் சில அரசியல் நோக்கம் கொண்டவை' என்றார்.

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்

## தமிழகத் தலைநகர் எடுக்கும் மகத்தான விழா

### சென்னை மாவட்டக் கழகத்தின் சிறப்புமிகு ஏற்பாடுகள்

சென்னை, செப். 7—

பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாள் விழாவினை முந்திய ஆண்டுகளைக் காட்டிலும் மிகச் சிறப்பாகவும், பிரம்மாண்டமான முறையிலும் கொண்டாடுவதற்குச் சென்னை மாவட்ட தி. மு. கழகம் தீவிரமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

கண்டோர் வியக்கும் சிறப்புக்களோடு விழாவை இந்த ஆண்டு நடத்திட வேண்டும் என்கிற முனைப்பில் மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், ஒவ்வொரு பணிக்கும் தனித்தனிக் குழு அமைத்துச் செயலாற்றி வருகிறார்.

### அண்ணாவுக்கு மரியாதை

அண்ணன் பிறந்த நாளான செப்டம்பர் 15-ல் அதிகாலை வழக்கம்போல், கழகத் தலைவர்களுடன் சென்னை மாவட்டக் கழக நிர்வாகிகளும் — தோழர்களும் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்துத் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வர்.

பின்னர், அண்ணா இல்லம் சென்று அண்ணியார் இராணி அம்மையார் அவர்களுக்கு எப்போதும்போல் புத்தாடைகளும்—கனிவகைகளும் அளித்துத் தங்கள் அன்பையும் மரியாதையையும் தெரிவித்துக் கொள்வர்.

கழகத் தலைவரும், பொதுச் செயலாளரும் விடுத்த வேண்டுகோளுக்கேற்பச் சென்னையில் ஒவ்வொரு வட்டக் கிளையும், அண்ணா பிறந்த நாள் விழாவை மிகக் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கும் போட்டி போட்டு ஏற்பாடுகளைச் செய்துவருகின்றன.

கிளைகள் — துணை — சார்பு மன்றங்கள் அத்தனையும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு வழங்கவும், பள்ளிச் சிறார்களுக்குப் பலகை புத்தகம் — சீருடை அளிக்கவும் மிகத் தீவிரமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

தமிழர்களின் நலம் நாடிக் காலமெலாம் உழைத்த நம் அண்ணனுக்குத் தேமதுரத் தமிழ்மொழியால் கவிதைச் சரம் தொடுத்து அணிவிக்கும் புகழ்வாய்ந்த கவிஞர்கள் மலர் கலந்துகொள்ளும் கவியரங்கம் அன்று காலை நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

### தி. மு. கழகம் பிறந்த நாள்

அண்ணன் பிறந்த நாள் விழாவைத் தி. மு. கழகம் பிறந்த நாளான செப். 17 அன்று இரட்டிப்புச் சிறப்போடு கொண்டாடுவதற்கான மிகப் பிரமாண்டமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### சிறப்புமிக்க ஊர்வலம்

சிறப்பான ஊர்வலத்தை நடத்துவதில் சென்னை மாவட்டக் கழகத்துக்குள்ள புகழையும் பெருமையையும் தொடர்ந்து நிலைநாட்டிக் கொள்வதற்கான உறுதியோடு ஊர்வலக் குழுத் தலைவர் செயல்வீரர் ஆர். டி. சீதாபதி கண்ணுங்கருத்துமாகப் பணியாற்றி வருகிறார்.

அண்ணன் இருந்தபோது நடத்திக் காட்டி அவர் வியந்த பல ஊர்வலத்தைப்போலவே, செப்டம்பர் 17-ம் நாள் ஊர்வலமும், கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் மிகுதியான பாராட்டுதலைப் பெறக்கூடியதாக அமையும் என்று ஊர்வலக் குழு சூளுரைத்துச் செயலாற்றி வருகிறது.

### ஊர்வலம் செல்லும் பாதையின் விவரம்

செப்டம்பர் 17 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு சென்னை — மூலக்கொத்தளத்திலுள்ள முதல் இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களான தாளமுத்து—நடராசன் நினைவுச் சின்னத்திலிருந்து துவங்கும்.

அங்கிருந்து வால்டாக்ஸ் சாலை— பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை— காந்தி இர்வின் சாலை—லான்ஸ் தோட்டச்சாலை (சித்ரா டாக்கீசு)— பிளாக்கர்ஸ் சாலை (கெயிட்டி டாக்கீசு) — அண்ணா சிலை— அண்ணா சாலை—ஜெனரல் பீட்டர்ஸ் சாலை—பைகிராப்ட்ஸ் சாலை வழியாகக் கடற்கரைச் சீரணி அரங்கத்தை அடையும்.

### அணிவகுப்பின் சிறப்பு

17-ம் தேதி ஊர்வலத்தில் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் உட்பட தலைமைக் கழக நிர்வாகிகள் அனைவருமே கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஊர்வலத்தின் முன்னால் கலையுலகக் கலைஞர்கள் மு. க. முத்து, எம். ஆர். ஆர். வாசு, தேங்காய் சீனிவாசன், சி. எல். ஆனந்தன் ஆகியோர் குதிரைகள்மீது அமர்ந்து ஊர்வலத்தை ஒழுங்குபடுத்தி வருவர்.

ஊர்வலத்தில், யானை குதிரைகள் அணிவகுப்பு — அண்ணா சுடர் ஏந்திய 64 கழகக் காளையரின் தொடர் ஓட்டம் — கேட்போரை நெகிழச் செய்யும் பல்வேறு இசைக் குழுக்கள் — பேரறிஞர் அண்ணா பெரிதும் விரும்பிய கிராமியக் கலைகளான புரவி ஆட்டம் — கரக ஆட்டம் — மயிலாட்டம் — ஒயிலாட்டம் — வீரச் சிலம்பாட்டம் ஆகிய அத்தனையும் இடம் பெறும்.

அண்ணனின் 64-வது பிறந்த நாளைக் குறிக்கும் 64,000 தோழர்கள் கழகக் கொடிகளைக் கரங்களில் ஏந்தி கொடிப் படையினராக அணிவகுத்து வருவர்.

சென்னையின் 12 பகுதிகளிலிருந்தும் பகுதி ஒன்றுக்கு 64 தோழர்கள் சீருடை அணிந்து கொடிப் படையை அடுத்து அணிவகுப்பர்.

அண்ணன் வழியில் அயராது நடைபோடும் கலைஞரின் தலைமையிலான கழகத்தின் பல்வேறு போராட்டங்களையும் — நிகழ்ச்சிகளையும் விளக்கிடும் கருத்துச் செறிவோடு 64 அலங்கரிக்கப்பட்ட இரதங்கள் (டிரக்குகள்), கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் ஊர்வலத்தில் பவனி வரும்.

அண்ணனின் பொன்மொழிகளையும் — அரசின் சாதனைகளையும் விளக்கிடும் வண்ண வண்ணச் சித்திரங்களைத் தாங்கி 64 சைக்கிள் ரிக்ஷாக்கள் ஊர்வலத்தில் ஊர்ந்துவரும்.

இவைகள் — இதுவரையில் ஊர்வலக் குழுவினரால் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள்.

ஊர்வலம் செல்லும் வழிநெடுகிலும் வளைவுகள் — தோரண வாயில்கள் — பந்தல்கள் பலப்பல அமைவதற்கான ஏற்பாடுகளை பணிக் குழுத் தலைவர் அ. செல்வராசன் இரவு பகலாகக் கண்காணித்துக் கவனித்து வருகிறார்!

### பொதுக்கூட்டம்

இரவு 7 மணிக்கு கடற்கரைச் சீரணி அரங்கில் பொதுக்கூட்டம் நடைபெறும்; கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் — பொதுச்செயலாளர் டாக்டர் நாவலர் — பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். — துணைப் பொதுச்செயலாளர்கள் — அமைச்சர் பெருமக்கள் — கழக முன்னணியினர் ஆகியோர் கலந்துகொள்வர்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா — 63-ஆம் ஆண்டு நிறைவு விழா

# செப். 15 முதல் 30-ம் நாள் வரையில் சிறப்புறக் கொண்டாடுக!

## கழக அமைப்புக்கள் — துணை சார்பு மன்றங்கட்குப் பொதுச்செயலாளர் நாவலர் வேண்டுகோள்

சென்னை, செப். 4—

"பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரைகளையும் — அவர் கொண்டிருந்த இலட்சியங்களையும் மக்களுக்கு எடுத்துவிளக்கும் வகையில் சொற்பொழிவுகள் — இன்னிசைக் கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்தியும், கழகக் கொடி ஏற்றுதல் — அண்ணா அவர்களின் திருவுருவப் படம் திறந்துவைத்தல் — குழந்தைகட்கு இனிப்பு வழங்குதல் — ஏழைகட்கு உணவு அளித்தல் — பள்ளிச் சிறார்கட்குப் புத்தகம் மற்றும் எழுது பொருட்கள் வழங்குதல் போன்றவற்றை மேற்கொண்டும், சிறப்பான ஊர்வலங்கள் நடத்தியும், விழா நாட்களைப் பெருமைக்குரிய வகையில் கொண்டாடுமாறு கழகத்தின் மாவட்ட — வட்ட — பகுதி — கிளைக் கழகங்களின் நிர்வாகிகள் — தோழர்கள், கழகத் துணைச் சார்பு மன்றங்களின் நிர்வாக்கள் — தோழர்கள், கழகச் சார்பான தொழிற் சங்கங்களின் நிர்வாகிகள் — தோழர்கள் ஆகியோரை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளைச் சீருடனும் சிறப்புடனும் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்ளும் வகையில் விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டிருக்கிறார்; அவரது அறிக்கை வருமாறு:—

"கழகத்தின் ஒப்பற்ற தலைவரும் — தி.மு. கழகம் கண்டவரும் — வழிகாட்டியும் — இந்த நாட்டின் அரசியலில் கண்ணியத்தையும் கடமை உணர்வையும் மிகுதியாக வளர்த்தவரும் — சனநாயகத்தின் பெருங்காவலராக விளங்கியவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா, செப்டம்பர் 15-ம் நாள் அமைகிறது.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே விடுத்துள்ள வேண்டுகோளுக்கேற்பவும், ஆண்டுதோறும் நாம் கொண்டாடும் சிறப்புகளுக்கேற்பவும், செப்டம்பர் 15-ம் நாள்முதல் 30-ம் நாள் வரையிலான இரண்டு கிழமைகளைப் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவாகவும் — அறுபத்துமூன்றாம் ஆண்டு நிறைவு விழாவாகவும் கொண்டு, எல்லா வகையிலும் சிறப்புறக் கொண்டாடுவதற்கு, முனைந்து ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நாடெங்குமுள்ள கழக அமைப்புக்களையும் — துணை சார்பு மன்றங்களையும் — தோழர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆங்காங்குள்ள கழக அமைப்புக்கள், ஆங்காங்குள்ள தோழமைக் கட்சிகளின் தலைவர்களையும் — தோழர்களையும் விழா நாட்களின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

அண்ணா அவர்கள் போதித்த கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு ஆகியவற்றுக்கேற்ப விழா நிகழ்ச்சிகள் அமைதல் வேண்டும்."

# உலகையே துயரில் ஆழ்த்தும் சோக நிகழ்ச்சி

## அரபுக் கொரில்லாக்களின் வெறிச் செயலால் பலியான மனித உயிர்கள்

### ஒலிம்பிக் விளையாட்டு அரங்கில் அஞ்சலி

மூனிச், செப் 7—

மேற்கு ஜெர்மனியில் மூனிச் எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒலிம்பிக் நகரில் பரபரப்பும் பயங்கரமும் நிறைந்த சம்பவங்கள், கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலையில் தொடங்கின.

உலகின் 122 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டுக் குழுவினர் துயிலில் ஆழ்ந்திருந்த நேரத்தில்—எட்டு அரபுக் கொரில்லாக்கள் ஒலிம்பிக் நகரில் அமைக்கப்பட்டிருந்த வேலியைத் தாண்டி உள்ளே குதித்தனர்.

அந்த அரபுக் கொரில்லாக்கள் நேராக இஸ்ரேல் விளையாட்டு வீரர்கள் தங்கியிருந்த முகாமிற்குள் நுழைந்து ஆயுதங்களையும்—வெடிகுண்டுகளையும் காட்டி மிரட்டி அங்கிருந்த இஸ்ரேலியர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டனர்; மூன்று பேர்களைச் சுட்டு வீழ்த்தினர்; 8 பேர்களைப் பிணைக் கைதிகளாகப் பிடித்துக்கொண்டனர்.

அரபுக் கொரில்லாக்களிடம், 'உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறோம்; இஸ்ரேல் விளையாட்டு வீரர்களை விட்டு விடுங்கள்' என்று மேற்கு ஜெர்மனி அரசாங்கம் கேட்டுக்கொண்டது; ஆனால், அந்தக் கொரில்லாக்கள், 'எங்களுக்குப் பணம் தேவையில்லை; இஸ்ரேல் நாடு சிறைபிடித்து வைத்திருக்கும் 200 அரபுக் கொரில்லாக்களை விடுதலை செய்தால், இஸ்ரேல் விளையாட்டு வீரர்களை விட்டுவிடுகிறோம்' என்று அறிவித்தனர்; ஆனால், அரபுக் கொரில்லாக்களை விடுதலை செய்ய இஸ்ரேல் மறுத்துவிட்டது.

கொரில்லாக்களிடமிருந்து விளையாட்டு வீரர்களைக் காப்பாற்ற மேற்கு ஜெர்மனி அரசாங்கம் ஒரு தந்திரம் செய்தது; அந்தக் கொரில்லாக்கள், 'நாங்கள் எகிப்து தலைநகரான கெய்ரோவுக்குச் செல்ல விரும்புகிறோம்; எங்களுக்கு ஒரு ஜெட் விமானம் வேண்டும்' என்று கேட்டனர்; அதற்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

ஒலிம்பிக் மைதானத்திலிருந்து 3 ஹெலிகாப்டர் விமானங்களில் கொரில்லாக்கள் விமான நிலையத்துக்குப் புறப்பட்டனர்; 8 இஸ்ரேல் வீரர்களின் கைகளையும்—கண்ணையும் கட்டித் தங்களுடன் கொண்டு சென்றனர்.

ஹெலிகாப்டர் விமானம் விமான தளத்தை அடைந்தது; அங்கு கொரில்லாக்கள் கேட்டுக்கொண்டபடி, ஒரு 'ஜெட்' விமானம் தயாராக நின்றுகொண்டிருந்தது; என்றாலும், மேற்கு ஜெர்மனி போலீசார் விமான நிலையத்தைச் சுற்றிப் பதுங்கியிருந்தனர்; கொரில்லாக்கள் ஹெலிகாப்டரிலிருந்து இறங்கி ஜெட் விமானத்துக்கு நடந்து செல்லும்போது அவர்களைச் சுட்டுக் கொன்றுவிட வேண்டும் என்பது போலீசாரின் திட்டமாகும்.

இந்த நிலையில், ஒரே ஒரு ஹெலிகாப்டரிலிருந்து 2 கொரில்லாக்கள் மட்டும் கீழே இறங்கினார்கள்; ஜெட் விமானத்தைப் பரிசோதிப்பதற்காக அவர்கள் சென்றனர்; அப்போது, மறைந்திருந்த போலீசார் அவர்களை நோக்கிச் சுட்டனர்; இரண்டு கொரில்லாக்களும் செத்து மடிந்தனர்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதும், மற்ற கொரில்லாக்கள் ஹெலிகாப்டரிலிருந்து எட்டிப்பார்த்து, நடந்ததைக் கண்டுகொண்டனர்; உடனே அவர்கள், கைகால்கள் கட்டப்பட்டுக் கிடந்த 8 இஸ்ரேலிய வீரர்களையும் ஈவு இரக்கமின்றித் துப்பாக்கியால் சுட்டனர்; பின்னர், போலீசாரை நோக்கிச் சுட்டனர்; கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது.

'தப்பிக்க முடியாது' என்பதை உணர்ந்த அரபுக் கொரில்லா ஒருவன் வெடிகுண்டுகளை வீசி 3 ஹெலிகாப்டர் விமானங்களையும் தகர்த்துவிட்டான்; அவை தீப்பிடித்து எரிந்தன; தப்பி ஓட முயன்ற 3 கொரில்லாக்களைப் போலீசார் மடக்கிப் பிடித்தனர்.

விமான நிலையத்தில் நடந்த இந்தத் துப்பாக்கிச் சண்டையில், புரட்சிக்காரர்கள் 5 பேர் கொல்லப்பட்டனர்; ஒரு போலீசுக்காரர் பிணமானார்.

ஒலிம்பிக் மைதானத்தில் 3 வீரர்கள்—விமான நிலையத்தில் 8 வீரர்கள்—5 கொரில்லாக்கள்—ஒரு போலீசுக்காரர் ஆகமொத்தம் 17 பேர் உயிரிழந்துவிட்டனர்.

ஒரு நாடகம்போல் அடுக்கடுக்காக நடந்த இந்தத் துயரச் சம்பவங்களினால் உலகத் தலைவர்கள், அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்திருக்கின்றனர்.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி, 'இந்த அறிவுகெட்ட வன்முறையைக் கண்டிக்காமல் இருக்கமுடியாது; இத்தகைய கொடூரமான வன்செயல்களினால் எந்தப் பிரச்சினைக்கும் ஒருபோதும் தீர்வு காணமுடியாது' என்று கூறியிருக்கிறார்.

உயிர் துறந்த இஸ்ரேல் வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், ஒலிம்பிக் மைதானத்தில் நினைவு அஞ்சலி நடைபெற்றது; அந்தோ!—ஒலிம்பிக் விளையாட்டுகள் தொடங்கியபோது இதே மைதானத்தில் எல்லா நாடுகளின் விளையாட்டு வீரர்களும் அணிவகுத்து நின்றனர்; இப்போது, சோகம் ததும்பிய நிலையில் அணிவகுத்து அஞ்சலி செய்தனர்.

### ஆசிரியர் முன்னேற்றப் பேரவை முகவரி

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றப் பேரவையுடன் தொடர்பு கொள்ள விழைவோர் பின்வரும் முகவரியைப் பயன்படுத்திக் கொள்க:—

புலவர் உலகொளி, மாநில அமைப்பாளர், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றப் பேரவை, உம்பிகாபுரம், திருச்சி 4.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]

### நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

9—9—72

குத்தாலம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு நகரப் பூங்காவில்; தலைவர்: மு. தங்கையன்; பேசுவோர்: அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், கோ. சி. மணி எம்.எல்.சி., எஸ். கணேசன் எம்.எல்.ஏ., கே. சுப்ரவேலு எம்.பி., இரெ. ஜோசப்.

# விஷமிகளின் திட்டமிட்ட செயல்

## உண்மைக்கு மாறாகப் பத்திரிகைகளில் செய்தி

### தலைமையமைச்சரே நேரில் நிலைமையை அறிய வாய்ப்பு

### தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி விழாவில் நடந்தது பற்றி முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, செப் 7—

தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி வெள்ளி விழாவின்போது சில விஷமிகள் கூட்டத்துக்குள் ஊடுருவித் திட்டமிட்ட கலவரத்தில் ஈடுபட்ட நிலையினை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களிடம் விளக்கினார்.

நேற்று கன்னியாகுமரியிலிருந்து சென்னை திரும்பியதும் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த முதலமைச்சரிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும்—முதல்வர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"தூத்துக்குடியில் நடந்தது என்ன—அந்த நிகழ்ச்சி பற்றிப் பல்வேறுபட்ட செய்திகள் வந்துள்ளனவே!"

முதல்வர்:—"மேடைக்கு நேர் எதிரில் வட்டவடிவமாகக் கம்புகள் கட்டப்பட்ட இடத்திற்கு அருகில் ஒரு சில மாணவர்களும்—அவர்களுக்குத் துணையாக ஒரு சில விஷமிகளும் அமர்ந்து கொண்டு, திரு. வீரபாகு வரவேற்புரையாற்றும்போது கைகளை ஆட்டிக் கூச்சல் போட்டனர்; 'ஒலிபெருக்கி ஒருவேளை கேட்கவில்லையோ' என்ற சந்தேகத்தில் ஒலிபெருக்கிக்காரர் அந்தக் கருவியைப் பழுதுபார்க்கத் தொடங்கினார்.

இந்தக் கல்லூரி விழா, ஒரு கட்டடத்திற்குள் நடைபெறவில்லை; கல்லூரியை அடுத்துள்ள ஒரு பெரிய மைதானத்தில் நடைபெற்றது; இருபதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அமர்ந்திருந்த அந்த விழாவில், ஒரு சிலர் திட்டமிட்டுக் கூச்சலிட்டனர்; நான் பேச எழுந்ததும், மேலும் கூச்சலிடத் தொடங்கினர்—மேடையை நோக்கிச் செருப்புக்களை வீசினர்; அதைப் பொருட்படுத்தாமல் நான் பேசிக் கொண்டே வந்தேன்; நான் பேசி முடித்ததும், ஆளுநரும்—மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும்—அமைச்சர் இராசாராமும் பேசினர்.

'இன்னார் பேசுவார்' என்று நான் பெயர்களை அறிவிக்கப் போனபோதெல்லாம் கூச்சலிடுவதும்—செருப்புகளை வீசுவதுமான செயலில் அந்த ஒரு சிலர் தொடர்ந்து ஈடுபட்டனர்.

பிறகு நான் இடையிலே—சி. சுப்பிரமணியம் பேசுவதற்கு முன்பு—மீண்டும் பேசத் தொடங்கினேன்; 'தூத்துக்குடி விழாக்கோலம் கொண்டிருப்பதைக் காணச் சகிக்காத சிலர், இப்படிப்பட்ட காரியத்திற்குத் தூண்டிவிடப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது; நான் காட்டுகின்ற அமைதியையும்—பொறுமையையும், கோழைத்தனமென்று கருதிவிடாதீர்கள்' என்று எச்சரித்தேன்; உடனே விஷமிகளைச் சுற்றி உட்கார்ந்திருந்த பொதுமக்கள், விஷமிகளை ஒரு நொடியில் அங்கிருந்து அப்புறப்படுத்தினர்; அதற்குப் பிறகு அமைதி உருவாயிற்று; நான் தொடர்ந்து பேசி முடித்துவிட்டு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களைப் பேசுமாறு அழைத்தேன்."

கேள்வி:—"கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் சிலர், நீங்கள் பேசும்போது கழகக் கொடிகளை ஆட்டி ஆரவாரம் செய்ததால் கலவரம் உருவாயிற்று என்று செய்தி வெளியாகியிருக்கிறதே!"

முதல்வர்:—"கழகக் கொடிகள் கொண்டு வரப்பட்டதாகவும், அதனால்தான் கலவரம் உருவாயிற்று என்றும் கூறுவது தவறு; தலைமையமைச்சரும்—நானும் ஊர்வலமாக வந்த வழியில் ஏராளமானவர்கள் காங்கிரசுக் கட்சிக் கொடியுடனும்—கழகக் கொடியுடனும்—கம்யூனிஸ்டுக் கட்சிக் கொடியுடனும் இருந்தார்கள்; அவர்கள் அனைவரும் ஊர்வலம் முடிந்து விழாவிற்கு வந்தார்கள்.

கழகக் கொடி வைத்திருப்பவர்கள் அந்தப் பெருங் கூட்டத்தில் ஒரு ஓரத்தில் நின்று கொண்டிருந்தார்களேயல்லாமல், கலவரத்தில் ஈடுபட்டவர்கள் இருந்த திட்டுப் பகுதிக்கு வரவே இல்லை; இந்த நிகழ்ச்சி அனைத்தையும் நேரில் கண்டேன்; நிகழ்ச்சி முடிந்த பிறகு தலைமையமைச்சரிடத்தில் சொன்னேன்—

'தமிழ் நாட்டில் தி. மு. கழக அரசுக்கு எதிராக எப்படிப்பட்டவர்கள் கிளர்ச்சி நடத்துகிறார்கள் என்பதை நேரில் பார்த்தீர்கள்; நாளைக் காலையில் பத்திரிகையில் திரித்து வெளியிடப்படும்; அதையும் நீங்களே காணலாம்"

என்று சொன்னேன்; நான் சொன்னது போலவே, காலையில் வெளிவந்த செய்திகளை நாங்கள் பார்த்தோம்; நிகழ்ச்சிகளுக்கும்—செய்திகளுக்குமுள்ள வேறுபாட்டைத் தலைமையமைச்சரே நேரடியாக அறிந்துகொள்ள நல்ல வாய்ப்பு ஏற்பட்டது."

முதலமைச்சர் இதுபற்றி மேலும் விளக்குகையில், தி. மு. கழகத்தினர் அமைத்திருந்த வரவேற்பு வளைவுகளில் தலைமையமைச்சர் படமும்—என் படமும் போட்டிருந்தார்கள்; ஊர்வலத்தின்போது வீதியோரங்களில் நின்றவர்கள், கடைசியாக வந்த கூட்டத்தின் ஓரத்தில்தான் நின்றார்கள்; கலவரம் செய்தவர்கள் முன்பகுதியில் இருந்தார்கள்' என்றார்.

கேள்வி:—"எந்தக் கல்லூரி மாணவர்கள் இந்தக் கலவரத்தைச் செய்தார்கள்?"

முதல்வர்:—"அதில் ஈடுபட்டவர்கள் யார் என்பதைப் போலீசார் விசாரிப்பார்கள், நான் அதுபற்றித் திட்டவட்டமாகக் கூற முடியாது."

# தென்கோடி தமிழ்மக்களின் கனவு நனவாகிறது

## காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இரயில் பாதை இணைப்பு

### நெல்லை —— குமரி இருப்புப் பாதைத் திட்டம் துவக்கம்

கன்னியாகுமரி செப். 7—

திருநெல்வேலி—கன்னியாகுமரி—திருவனந்தபுரம் அகல இரயில் பாதைக்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி, நேற்று அடிக்கல் நாட்டினார்; இந்த இரயில் பாதையை அமைக்கும் வேலை மூன்று ஆண்டுகளில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவில் வழியாகத் திருவனந்தபுரம் செல்லும் இந்த இரயில் பாதை 164 மைல் நீளமுள்ளதாகும்; இந்த இரயில் பாதை அமைக்கும் திட்டத்திற்கு ரூ. 14,53 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரயில் பாதைக்கு அடிக்கல் நாட்டியதன் மூலம் பல ஆண்டுகளாக மக்கள் கண்ட கனவு நனவாகிறது; வடகோடியில் உள்ள காஷ்மீரிலிருந்து தென்கோடியில் உள்ள கன்னியாகுமரிக்கு இரயில் பாதை இணைப்பு ஏற்படுகிறது.

விழாவிற்கு முதலமைச்சர் கலைஞர் தலைமை வகித்தார்.

விழாவில் மத்திய இரயில்வே அமைச்சர் டி. ஏ. பாய், துணை இரயில்வே அமைச்சர் முகமது ஷபி குரேஷி, கேரள முதல்வர் அச்சுத மேனன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரயில்வே போர்டு தலைவர் பி. எஸ். டி. மாலிக் வரவேற்புரை ஆற்றினர்.

மேடையில் எம். எஸ். சிவசாமி எம்.பி., மதுரை மேயர் எஸ். முத்து, எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி. ஆகியோருடன் காமராசர் அமர்ந்திருந்தார்.

புதிய இரயில் பாதைக்கான அடிக்கல், இரண்டு கற்களாக இருந்தன; ஒரு கல்லில் தமிழிலும்—மலையாளத்திலும், இன்னொரு கல்லில் ஆங்கிலத்திலும்—இந்தியிலும் எழுதப்பட்டிருந்தன.

அடிக்கல்லுக்கு மேலே 'கன்னியாகுமரி இரயில் நிலையம்' என்று எழுதப்பட்ட போர்டு இருந்தது.

இரயிலின் பாயிண்ட் அடிப்பது போல அமைக்கப்பட்ட கருவியைத் தலைமையமைச்சர் இயக்க—அடிக்கல் மீதான திரை விலகியது.

### மறைவு

பெங்களூர் 1-வது வட்ட எசவந்தபுரம் தி. மு. க. துணைச் செயலாளர் ஆர். எஸ். வாசனின் அன்னையார் 28—8—72-ல் இயற்கையெய்தியது குறித்து வட்ட தி. மு. கழகம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

### பேச்சாளர் முகவரி

ஜி. எம். வேலன்,
மாவட்டத் துணைச் செயலாளர்,
தி.மு.க., குன்னூர்-2,
நீலகிரி மாவட்டம்.